2022 மார்ச் 23]

வரலாற்றிலே இல்லாத அளவிற்கு இன்றையதினம் ரூ.13,218 கோடி வருமானத்தைப் பெற்றிருக்கிறது. வணிக வரித் துறை முதலிடத்தில் இருப்பதோடு, அதிகமாக வருமானத்தையும் இத்துறை பெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தேவையை அறிந்து, நிச்சயமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, தேவைப்படும் இடங்களிலே இந்த ஆண்டு சார்-பதிவாளர் அலுவலகங்களைக் கட்டித் தருவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

மாணவியர் விடுதி

***2375—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியருக்கான விடுதியில் கல்லூரி மாணவியரும் தங்கிப் படிப்பதற்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. க. அன்பழகன் அவர்களுடைய கும்பகோணம் தொகுதியில் ஏற்கெனவே, இரண்டு பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகள் உள்ளன. அவற்றிலே மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவியரும் அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே, பள்ளி மாணவியர் விடுதியில் கல்லூரி மாணவியரை அனுமதிக்க வேண்டிய தேவை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும் மேலான கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களை வணங்கி, இளைஞருடைய இதய வேந்தராக இருக்கின்ற தம்பி உதயா எம்.எல்.ஏ. அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 53-வது இனிய பிறந்த நாள் காணும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு உளங்கனிந்த நல்வாழ்த்துகளை (மேசையைத் தட்டும் ஒலி) என் சார்பிலும், தங்கள் சார்பிலும், அவையிலுள்ள அனைவரின் சார்பாகவும் தெரிவித்துக்கொண்டு மனமார வாழ்த்துகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் சுமார் 5,000 மாணவிகள் பயில்கின்றனர். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த சுமார் 4,000 மாணவிகள் அதில் பயில்கின்றனர். இக்கல்லூரியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மகளிர் விடுதி ஒன்று, பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மகளிர் விடுதிகள் இரண்டு, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி மற்றும் சிறுபான்மையினர் நல விடுதி என 4 விடுதிகள் உள்ளன. அருகிலுள்ள மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு இந்த விடுதிகள் வசதியாக உள்ளன. ஆனால், பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் இரண்டிலும் சுமார் 80 மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு மட்டுமே இடவசதி உள்ளது. குறிப்பாக மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 40 மாணவர்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 28 மாணவர்களும், 11 ஆதி திராவிடர் மாணவிகளும் தங்கிப் படிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்ஜெட் விவாதத்தில் பேசுவது போன்று பேசுகிறீர்கள். கேள்விக்கு வாருங்கள்.

திரு. க. அன்பழகன்: என்ன படிக்கிறார்கள் என்று சொல்ல வேண்டுமல்லவா? இவர்களுக்கு தங்குவதற்கு கூடுதலாக அறைகள் இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .

2022 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கூடுதலாக ஒரு விடுதி வேண்டுமென்று கேள்வி கேட்கிறீர்கள், அவ்வளவுதானே!*

திரு. க. அன்பழகன்: *பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 100 மாணவிகள் தங்கிப் படிப்பதற்கான தங்கும் விடுதியை கட்டிக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பகுதியினுடைய நிலையை நானும் அறிவேன். எங்களுடைய பக்கத்து மாவட்டம், பக்கத்து தொகுதி. அதேபோன்று அண்ணன் அன்பழகன் அவர்களுடைய கோரிக்கையை நீண்ட நாட்களாக அறிவேன். 2011–2016 சட்டமன்றப் பேரவை காலத்தில், சட்டமன்ற உறுப்பினராக இருவரும் அருகருகே இருக்கின்றபொழுதிலிருந்து இந்தக் கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார். வழக்கமாக, 'பக்கத்து இலைக்கு பாயாசம் கேட்பது' என்று சொல்வார்கள். அவர் கேட்கிற பாயாசம் எங்களுடைய மாவட்டத்திற்கும் பயன்படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, எங்களுடைய அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவியர்களும் அங்கே தங்கிப் படிக்கிறார்கள். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சருடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் அங்கேதான் தங்கிப் படிக்கிறார்கள். நாங்களே அவர்களிடத்தில்தான் சிபாரிசுக்குச் செல்வோம். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையில் நியாயம் இருக்கிறது. ஆனாலும், கல்லூரி மாணவியரை பள்ளி மாணவியர் விடுதியில் தங்க வைப்பதில் நிருவாகச் சிக்கல் ஏற்படும். அவ்வாறு கூடுதல் எண்ணிக்கை தேவைப்படுகின்றபட்சத்தில், அருகாமையில் உள்ள பள்ளி மாணவ–மாணவியர் விடுதியில் சேர்க்கை குறைவாக இருந்தால், அந்த மாணவ–மாணவியர் விடுதியை கும்பகோணத்திற்கு மாற்றி, அங்கே கூடுதல் இடங்களை ஏற்படுத்தலாமா என்பது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

[2022 மார்ச் 23

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அரசு மாணவர் விடுதி, 13 அறைகளுடன் 42 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. அந்த விடுதி பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவ்வப்போது பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. மழைக் காலங்களில் விடுதி மேற்கூரையில் தண்ணீர் கசிவு ஏற்பட்டு ஆங்காங்கே கூரை பெயர்ந்து விழுந்துவிடுகிறது. இந்த விடுதியிலும், அருகிலுள்ள மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள்தான் தங்கிப் பயில்கிறார்கள். இட ஒதுக்கீட்டிலும், கல்வித் துறையிலும் இன்னும் பல துறைகளிலும் இந்தியாவிலேயே முன்மாநிலமாக இந்தியாவை திரும்பிப் பார்க்க வைக்கும் நம்முடைய உயிருக்கும் மேலான தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியில் நல்லாட்சி புரியும் நம்முடைய தலைவர் அவர்கள் இருக்கின்ற இந்த அவையில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பிறந்தநாள் காணும் இந்த நேரத்தில், அதற்குப் பரிசாக கும்பகோணத்திற்கு இந்தத் தங்கும் விடுதியைத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் இரண்டாவது முறையாக பிறந்த நாள் வாழ்த்து சொல்லிவிட்டார். அவருடைய கருத்து உண்மையான கருத்து; அதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. நம்முடைய மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நாங்களும் கூறியிருக்கிறோம். வருகின்ற ஆண்டிலே கல்லூரி மாணவ-மாணவியர் விடுதிகளுக்கு கூடுதலாக இடம் ஒதுக்க வேண்டிய சூழல் இருக்கிறது.

மிகக் குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெண்களுடைய கல்விக்கு முக்கியத்துவம் அளித்து, அவர்கள் கல்வி பயில்கின்ற காலத்தில், மாதம் ரூ.1,000/– வழங்கப்படும் என்ற ஒரு மகத்தான திட்டத்தை அறிவித்திருக்கின்ற வேளையில், இந்த ஆண்டு கூடுதலாக மாணவிகள் கல்லூரிகளில் சேர்கின்ற சூழல் இருக்கிறது. எனவே, அவர்களுக்கு விடுதிகளும் கூடுதலாக அமைக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்பதைக் கருத்திலே

2022 மார்ச் 23]

கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில், நாமக்கல்லில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. அதில் சுமார் 4,000 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றார்கள். குறிப்பாக, அந்தக் கல்லூரியில் இளநிலை மற்றும் முதுநிலை படிப்பில் 750–க்கும் மேற்பட்ட மாணவியர் பயின்று வருகின்றனர். அவர்கள் தருமபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்களிலிருந்து வந்து இந்தக் கல்லூரியில் பயின்று வருகின்றார்கள். ஆனால், அவர்கள் வெளியிலே தங்கி, கல்வி பயின்று வருகிறார்கள். அங்கு மாணவிகளுக்கென்று தனியாக எந்தவொரு விடுதியும் இல்லை. எனவே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக மாணவிகள் தங்குவதற்கு விடுதிகள் அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் 1,354 மாணவ, மாணவியர் விடுதிகள் இருக்கின்றன. அதில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்காக 200 விடுதிகள் செயல்படுகின்றன. கடந்த காலங்களில் தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து ஆய்வு மேற்கொண்டபோது, கல்லூரி மாணவ, மாணவியருக்கான விடுதிகளின் தேவை கூடுதலாக இருப்பதை நாங்களும் உணர்ந்திருக்கின்றோம். எனவே, இந்த ஆண்டு கூடுதலாக கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு இடம் ஒதுக்க வேண்டிய சூழல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்*

TRUTH ALONE TRIUMPHS

அவர்களுடைய கருத்து கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

44—

கம்பிவட ஊர்தி

***3120—திரு. அம்மன் K. அர்ச்சுணன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதி, மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு கம்பிவட ஊர்தி வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு கம்பிவட ஊர்தி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அந்தப் பகுதிவாழ் மக்களிடையே பொதுவாக இருந்து வருகிறது. மண் பரிசோதனை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கம்பிவட ஊர்தி வசதி ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று பொதுப் பணித் துறையால் அறிக்கை தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா ஆகிய இருபெரும் தெய்வங்களை வணங்கி,